இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விமாணி பட்டப்படிப்பு(இயற்கை விஞ்ஞானம்)

இறுதிப்பரீட்சை 2011

**ESU 3114** – கல்வி வழிகாட்டலும் ஆலோசனை கூறலும்

**காலம்:** மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி. 06.10.2011 நேரம்: மு.ப 9.30 – பி.ப 12.30

பகுதி I இல் எல்லா வினாக்களுக்கும் பகுதி II இலிருந்து ஏதாவது மூன்று(03) வினாக்களுக்கும் விடை தருக.

## பகுதி I

01. வழிகாட்டலுக்கும் ஆலோசனைக்கும் இடையிலான வேறுபாட்டினை விளக்குக.

02. மாணவரின் பொருத்தப்பாட்டிற்கு தடையாகச் செயற்படும் மூன்று(03) காரணிகளைக் குறிப்பிடுக.

03. நேர்காணல் ஒரு ஆலோசனை நுட்பமாக பரந்தளவில் பயன்படுத்தப்படுகின்றது. நேர்முகம் காணலின் இரு(02) அனுகூலங்களையும் இரு(02) பிரதிகூலங்களையும் எழுதுக.

04. ஒழுக்க நெறிகளை பாதுகாப்பது ஏன் முக்கியம் என்பதனைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

05. கற்றல் குறைபாடுடைய பிள்ளை ஒன்றின் நடத்தைசார் வடிவங்கள் நான்கினை (04) பட்டியற்படுத்துக.

06. இலங்கையில் பாடசாலை முறைக்கு வெளியே நடைமுறைப்படுத்தப்படும் மூன்று(03) ஆலொசனைச் சேவைகளைக் குறிப்பிடுக.

07. 'உடற் குறைபாடு' வரையறுக்குக.

08 ஆலோசனையின் மூன்று முக்கிய பரப்புகளை பெயரிடுக.

(05 × 08 = 40 புள்ளிகள்)

## பகுதி II

09. (i) 'பொருத்தப்பாடு' வரையறுக்குக. (05 புள்ளிகள்)

(ii) பொருத்தப்பாடு அடைவதற்கான இயலாமை எவ்வாறு ஒரு கல்விசார் பிரச்சினையாக மாறும் என்பதனை உதாரணங்களுடன் விளக்குக.

(06 புள்ளிகள்)

(iii) ஒரு ஆசிரியருக்கு பொருத்தப்பாடடைதல் என்பதனை விளங்கிக்கொள்ளல் முக்கியமானது என்பதனைக் காட்டுவதற்கான மூன்று காரணங்களைக் குறிப்பிடுக.

(09 புள்ளிகள்)

10. (i) மீத்திறன் உள்ள பிள்ளைகள்/உயர் ஆற்றலுள்ள பிள்ளைகளின் ஐந்து(05) குணவியல்புகளை பட்டியற்படுத்துக.

(05 புள்ளிகள்)

(ii) உயர் ஆற்றலுள்ள பிள்ளைகளிடம் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தினை கலந்துரையாடுக.

(15 புள்ளிகள்)

11. (i) இலங்கையில் தொழில் வழிகாட்டல் சேவையின் வரலாற்றினை சுருக்கமாக விளக்குக.

(06 புள்ளிகள்)

(ii) இடைநிலைப் பாடசாலை மாணவர்களுக்கு தொழில் வழிகாட்டல் ஆலொசனைச் சேவையின் தேவையினை பரிசீலனை செய்க.

(14 புள்ளிகள்)

12. (i) 'கற்றல் இடர்பாடுகள்' என்பதனால் கருதப்படுவது யாது?.

(06 புள்ளிகள்)

(ii) ஆரம்ப வகுப்புகளில் கற்றல் இடர்பாடுகளுடன் பிள்ளைகள் உள்ளார்கள். கற்பித்தல் - கற்றல் செயன்முறையின்போது இவர்களுக்கு உதவும் வகையில் முக்கிய கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்கள் பற்றி கலந்துரையாடுக.

(14 புள்ளிகள்)